# மாதிரி வினாத்தாள்
# மனையியல்
# மேல்நிலை இரண்டாமாண்டு

நேரம் 3 மணி மதிப்பெண் 150

பகுதி அ அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

பகுதி ஆ ஏதேனும் பதினைந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

பகுதி இ முதல் கேள்விக்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும். மீதமுள்ள கேள்விகளில் ஐந்திற்கு விடையளிக்கவும்.

பகுதி ஈ ஏதேனும் நான்கு கேள்விகளுக்கு விடையளிக்கவும்.

## பகுதி அ

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளி

**I.** கோடிட்ட இடங்களை நிரப்புக 15 **x** 1 = 15

1. ___________ ஒரு இயற்கையான சீழ் எதிர்ப்பு.
2. ___________ சமநிலைப்படுத்தும் உறுப்பாகும்.
3. சக்கஸ் எண்டிரிக்கஸ் ___________ல் சுரக்கப்படுகிறது.
4. வயதான மகளிர்க்கு கால்சியம் குறைவு ஏற்படுகையில் ___________ நோய்க்கு வழிவகுக்கிறது.
5. கடுகுடன் ___________ விதைகள் கலப்படம் செய்யப்படுகின்றன.
6. இனப்பெருக்கம் செய்யும் வயது ___________ ஆகும்.
7. ___________ என்பது கூட்டில், ஒன்றுமில்லாது வெறுமையாக இருக்கும் காலமாகும்.
8. ஆண், பெண் ஆகியோரின் பாலின உறுப்புகள் முழு முதிர் அளவினை பின் ___________ பருவத்தில் அடைகிறது.
9. உணவு கலப்பட தடுப்புச் சட்டம் ___________ ஆண்டு நிறைவேற்றப்பட்டது.
10. விவசாய பொருட்களுக்கு அளிக்கப்படும் தரக்குறியீடு ___________ ஆகும்.
11. ___________ குழுவில் உள்ளவர்கள் மற்றவரிடமிருந்து மாறுபடாமல் ஒரே எண்ணம் கொண்டிருப்பர்.
12. ___________ என்பது கோடுகள் மற்றும் சாய்வுத் தையல்களை சரிபார்க்க உதவுகிறது.
13. புதிய தலைப்பை அல்லது பாடத்தை அறிமுகப்படுத்த ___________ முறை மிகவும் சிறந்த முறையாகும்.
14. ___________ என்பது தெளிவான அழுத்தத்துடன் விளக்கப்படத்துடன், எழுதாமல் அல்லது குறைவான எழுத்துக்கள் மூலம் செய்யப்படுகிறது.
15. ___________ என்பது செயல்பாடுகளை/செய்திகளை ஆரம்பித்தவரிடமிருந்து பெறுபவருக்கு மாற்றுவதாகும்.

**II.** பொருத்துக. **10 x 1 = 10**

16. தொடை அழுத்தப்புள்ளி - பெல்லாகரா
17. மையோப்பியா - உமிழ்நீர் சுரப்பி

18. பரோட்டிட் - கோயிலோனிசியா

19. நையாசின் - கிட்டப்பார்வை

20. இரும்பு - தொடையில் உள்ள அழுத்தப்புள்ளிகள்

21. வளரிளம் பருவம் - நுகர்வோர் விதிகள்

22. ஏங்கல் - நடைபயிலும் குழந்தைகளின் அளவு

23. தைத்து மூட்டுதல் - வட்ட மேசை விவாதம்

24. அளவு 1 லிருந்து 3 வரை - வேகமான வளர்ச்சி மற்றும் மாற்றம் உள்ள காலம்

25. விவாதக் குழு - சீர் செய்தல்

**III.** சரியா, தவறா என எழுதவும் **6 x 1 = 6**

26. முளைக்கச் செய்வதால் பயறுகளில் தரம் மேம்படுகிறது.

27. சாதாரண துத்தநாகம் குறைவு, மணம், சுவை ஆகியவற்றில் குறைபாடை ஏற்படுத்தும்.

28. நடுவயது என்பது உடலின் முக்கிய பகுதிகள் ‘சோர்வுற்று செயலிழக்க நேரிடும் வயது அல்ல’ என்று குறிப்பிடப்படுகிறது.

29. வளங்கள் பயன்படுத்தப்படுவதை கொண்டு வாழ்க்கை தரம் நிர்ணயிக்கப்படுகிறது.

30. சிறிய அளவுகள் சிறுவர்கள் மற்றும் இளம் பருவத்தினர் அணிவதற்கு ஏற்ப கிடைக்கிறது.

31. கம்பளி வரைபடத்திற்குக் கட்டுக்கதை அவசியம் இல்லை.

**IV.** சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் **5 x 1 = 5**

32. ஆடைகளுக்கான பருத்தித் துணியின் அகலம் பொதுவாக____________ அளவு கொண்டிருக்கும்.

அ. 92 செ.மீ ஆ. 72 செ.மீ

இ. 55 செ.மீ ஈ. 100 செ.மீ

33. நெஃப்ரைட்டிஸ் நோயால் பாதிப்படையும் உறுப்பு

அ. கண் ஆ. காது

இ. சிறுநீரகம் ஈ. தோல்

34. காம்ப்ளான் என்பது இதன் உதாரணம்

அ. கலவையான உணவு ஆ. முன்பே ஜீரணிக்கப்பட்ட உணவு

இ. இயற்கையான திரவ உணவு

35. கரு முதலமைவுடைய காது கேளாமை ____________ குறைபாடுகளால் ஏற்படும்.

அ. மரபணு ஆ. நரம்பு

இ. புலன் உணர்வு நரம்பால் ஈ. நடுக்காது குழாயில் அடைப்பு

36. நீள கண்கள். மெல்லிய கூர்முனையுடைய ஊசி என்பது

அ. க்ரூயல் ஆ. மென்பட்டு மேசை துணிக்கான

இ. மணிக்கோர்க்க பயன்படுவது ஈ. டேப்பஸ்ட்ரி அல்லது ஓவிய திரைச்சீலைக்கானது

**V.** ஓரிரு வார்த்தைகளில் விடையளி **14 x 1 = 14**

37. முதலுதவி பயிற்சி பெறுவதற்கு சான்றிதழ்கள் வழங்கும் சங்கம் எது-

38. வாகனங்களில் இருந்து வெளியேற்றப்படும் வாயு எது?

39. பார்வை சுழற்சியின் போது செயல்படும் நிறமியின் பெயரை கூறுக.

40. GFR என்பதன் விரிவாக்கம் தருக.

41. பழத்தயாரிப்புகளில் பயன்படுத்தப்படும் பாதுகாப்பு பொருளின் பெயரை எழுதுக.

42. சீஸ் போன்ற உணவுப் பொருளில் நுண்ணுயிரிப் பெருக்கத்தை கட்டுப்படுத்த பயன்படும் பொருள் எது?

43. டைபாய்டு, பாரா டைபாய்டு ஆகியவற்றின் அறிகுறிகளை எழுது,

44. நடுவயதையும், முதுமையையும் பிரிக்கும் கோடாக கருதப்படும் வயது எது?

45. எவ்வகையான கணக்கு வைப்பில் குறைந்த தொகை கட்டணம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது?

46. ஒரு இயற்கை எரிபொருளை எழுது.

47. சிறப்பான கத்தரிக்கோலின் அளவு என்ன?

48. தையலை அகற்றவும், விளிம்புத் தையலை அகற்றவும் பயன்படும் கருவி எது?

49, நிரப்புத் தையல் ஒன்றை எழுது.

50. பை வரைகட்டத்தின் மற்றொரு பெயரை குறிப்பிடுக.

பகுதி - ஆ

**VI.** ஏதேனும் 15 வினாக்களுக்கு முப்பது வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளி. 15**x**2= 30

51. ABC விதியை விளக்குக.

52. கலப்பட பொருட்கள் என்றால் என்ன?

53. ஏஸ்டிக்மேட்டிஸம் என்றால் என்ன?

54. சிரோசிஸ் என்றால் என்ன?

55. தோலின் பல்வேறு அடுக்குகளை கூறுக.

56. உயிர்ச்சத்து A நோய்த்தடுப்பு திட்டம் பற்றி குறிப்பு எழுது.

57. உணவு ஒவ்வாமையின் 2 அறிகுறிகளை எழுது.

58. ஜுரத்தின் வகைகளை எழுது.

59. முதிர் பருவ வயதில் பொருத்துதலில் வெற்றி அடைவதற்கான மூன்று அடிப்படை அளவைகளை எழுது.

60. பிரெயில் - குறிப்பு எழுது.

61. பாலின முதிர்ச்சியின் தொடக்க காலத்தில் மகிழ்ச்சிக்கான 3 ‘A’ க்கள் எவை?

62. ஆற்றல் இழந்த குழந்தை பற்றி பேக்கரின் வரையறையை எழுது.

63. முக்கியமான தீர்மானம் என்றால் என்ன?

64. சேமிப்பின் முக்கியத்துவத்தை பற்றி எழுதுக,

65. விப்பிங் என்றால் என்ன?

66. பொருத்தி இணைப்பவை என்றால் என்ன?

67. பூப்போட்ட துணியால் ஒட்டுப் போடுதல் என்றால் என்ன?

68. உருமாதிரிகள் என்றால் என்ன?

69. புல்லட்டின் பலகை வரையறு.

70. நிலப்படங்கள் பற்றிய வெப்ஸ்டரின் வரையறையை எழுது.

பகுதி - இ

**VII.** விடைகள் ஒவ்வொன்றும் 100 வார்த்தைகளுக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

6**x** 5= 30

கட்டாயமாக பதிலளிக்கவும்

71. மூச்சுத்திணறலின் அறிகுறிகள் யாவை?

(அல்லது)

72. இரத்த ஒழுக்கின் வகைகளை விவரி.

ஏதேனும் ஐந்தினுக்கு பதிலளிக்கவும்

73. சிறுநீரகத்தின் அமைப்பினை விவரி.

74. கருப்பையின் பணிகள் யாவை?

75. ஜ9ரங்களில் உணவுத் திட்ட மேலாண்மையை விவரி.

76. பார்வை இழப்பிற்கான காரணங்களைக் கூறுக.

77. பார்க்கர் வகைப்படுத்தியுள்ள நேயங்களை விவரி.

78. நுகர்வோரின் உரிமைகளை விவரி.

79. அப்ளிக் உருவரை முன் மாதிரிகளை நீ எவ்வாறு அமைப்பாய்?

பகுதி ஈ

**VIII.** விடைகள் ஒவ்வொன்றும் 200 வார்த்தைகளுக்குக் குறையாமல் இருக்க வேண்டும்

**4 x 10 = 40**

ஏதேனும் நான்கு கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.

80. கேட்டலின் உடல் செயலியலை விவரி.

81. ஆத்ரோஸ்கிளரோசிஸ் மற்றும் அதிக இரத்த அழுத்தம் ஏற்படுவதன் காரணங்கள் மற்றும் உணவுத் திட்ட சிகிச்சைகளை எழுதுக.

82. காது கேளாத குழந்தையின் சிறப்புத் தேவைகளை விவரி.

83. செலவை பாதிக்கும் பல்வேறு காரணிகளைப் பற்றி எழுதவும்.

84. துணியை தேர்ந்தெடுக்கும்போது நடைமுறையில் கவனத்தில் கொள்ள வேண்டிய கருத்துக்கள் யாவை?

.85. சான்றுடன் விளக்குதலின் மதிப்பினை அல்லது பயன்களை எழுதுக.

## மனையியல் செய்முறை தேர்விற்கான வினாக்கள்

## மேல்நிலைப் பிரிவு - இரண்டாம் ஆண்டு

பகுதி **I** ல் இருந்து ஒரு வினாவுக்கும் பதில் **II** ல் இருந்து ஒரு வினாவுக்கும் விடையளிக்கவும்.

### பகுதி I

**I.** கொடுக்கப்பட்ட பொருட்களை மாதிரிகளை கண்டறிந்து ஏதாவது ஒரு பயனை எழுதவும். **5 x 2 = 10**

இனம் காணுதல் - 1 மதிப்பெண்

பயன் - 1 மதிப்பெண்

1. பிரிவு 1

அ. ஆப்பிள் ஆ. முன் கழுத்து கழலை இ. இரும்புச் சத்து

ஈ. ஒட்டுப் போடுதல் உ. கற்பிக்கும் சாதனம்

2. பிரிவு 2

அ. இஞ்சி ஆ. பைட்டாட் புள்ளிகள்

இ. மஞ்சள் தூள் கலப்படப் பொருள் ஈ. கலவை இயந்திரம்

உ. புரத சத்து

3. பிரிவு 3

அ. வெந்தயம் ஆ. ரிக்கட்ஸ் இ. ஹெம்மிங்

ஈ. அழுத்தக் கொதி கலன் உ. கற்பிக்கும் சாதனம்

4. பிரிவு 4

அ. வெங்காயம் ஆ. மைனா வாய் இ. சாட்டின் தையல்

ஈ. கால்சியம் உ. முட்டை அடிக்கும் கருவி

5. பிரிவு 5

அ. பூண்டு ஆ. பெல்லாகரா இ. கோதுமை

ஈ. கற்பிக்கும் சாதனம் உ. கீரை

### பகுதி II

1. அ. 100 கிராம் புதிய காளானில் அடங்கியுள்ள சத்துக்களின் மதிப்பை பற்றி எழுதுக. (10 மதிப்பெண்)

ஆ. காளானைக் கொண்டு ஏதாவது ஒரு உணவு தயாரிக்கவும். (10 மதிப்பெண்)

2. அ. கண்ணின் அமைப்பை படம் வரைந்து விளக்கு. (10 மதிப்பெண்)

ஆ. புரதம் மற்றும் வைட்டமின் A ஊட்டச்சத்து அதிகம் நிறைந்த ஒரு நாளைய உணவுத் திட்டம் எழுதி, ஒரு உணவுப்' பொருளை தயார் செய்க. (10 மதிப்பெண்)

3. அ. சிறுநீரகத்தின் அமைப்பை படம் வரைந்து விவரி. (10 மதிப்பெண்)

ஆ. காய்ச்சலுக்கான ஒரு நாளைய உணவுத் திட்டம் எழுதி, தயாரித்து ஒரு உணவுப் பொருளை தயார் செய்க. (10 மதிப்பெண்)

4. பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றை பாதுகாக்கும் முறைகளை எழுதி, ஏதாவது ஒன்றை தயார் செய்க. (10 மதிப்பெண்)

5. வைக்கப்பட்டுள்ள பயனற்ற பொருட்களை கொண்டு ஏதாவது ஒரு பயனுள்ள பொருளை தயார் செய்து வைக்கவும். செயல் முறையை எழுதவும்.

6. அ. வேலையை எளிதாக்கும் கருவி இரண்டின் பயன், பராமரிப்பு, முக்கியத்துவம், நன்மை, தீமை பற்றி எழுதவும். (10 மதிப்பெண்)

ஆ. நெப்ரான் அமைப்பை படம் வரைந்து விவரி˙ (10 மதிப்பெண்)

7. இரண்டு தற்காலிக தையல், இரண்டு நிரந்தர தையல் முறைகளில் ஒவ்வொன்றிலும் ஒரு மாதிரி செய்து செயல்முறையை சுருக்கமாக எழுதவும். (20 மதிப்பெண்)

8. கற்பிக்கும் சாதனம் மாதிரிப் படம் (chart) பயன்படுத்தி, ஏதாவது ஒரு மனையியல் பாடத்தை விளக்கவும். (20 மதிப்பெண்)

9. இரும்பு சத்து நிறைந்த ஒரு நாளைய உணவுத் திட்டம் எழுதி, ஒரு உணவுப் பொருளை தயார் செய்க. (20 மதிப்பெண்)

10. கொடுக்கப்பட்டுள்ள நான்கு உணவுப் பொருட்களில் கலப்படம் செய்யப்படும் கலப்பட பொருளை கண்டறிந்து செயல்முறையை எழுதுக. (20 மதிப்பெண்)